திரு. வி. கே. கோதண்டராமன் : அதைப்போன்ற காரியங்களில் ஈடு பட்டிருப்பவர்களை, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தனி நபர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வக்காலத்து வாங்கி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தஞ்சையில் வெண் மணியில் நடைபெற்ற சம்பவம் பற்றி உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை உண்டோ அதையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், நக்ஸலைட்களுக்காக இங்கே கேள்வி கேட்கப்படுகிற நேரத்தில் அவர்களுக்குச் சாதகமான முறையில் இங்கே கேள்வி அமைவது கூட நாம் வருந்துகிற ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், இந்த மன்றத்தில் அனைவரும் சேர்ந்து நக்ஸலைட்களை எதிர்க்கவேண்டும், அவர் களுடைய நடவடிக்கைகளை எதிர்த்தாகவேண்டும் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விசாரணை ஆணைக்குழுக்கள்

* 450 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967 மார்ச் திங்கள் முதல் அரசு அமைத்துள்ள விசாரணை ஆணைக் குழுக்கள் எத்தனை ?

(இ) எப்பாங்குகளைக் கொண்டும், எக்காரணங்களுக்காகவும் இந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன ?

(உ) எத்தனை ஆணைக்குழுக்கள் தங்கள் பணியை முடித்து அதற்கான அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளன ? அவற்றில் எத்தனை அறிக்கைகள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) எட்டு.

(இ) பின்வரும் நிகழ்ச்சிகளைப் பற்றி விசாரணை நடத்தி (மத்தியச்சட்டம் 60/1952) 1952-ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 3-வது பிரிவின்படி விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன :—

(1) கோயம்புத்தூர் மாவட்டத்தில் வேட்டைக்காரன் புதூர் நிகழ்ச்சி.

(2) நீலகிரி மாவட்டத்தில் அரவங்காடு காவலர் துப்பாக்கிச் சூடு

(3) சென்னையில் பேருந்து ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடந்த மோதல்.

(4) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உடையார்பாளையத்தில் நடைபெற்ற காவலர் துப்பாக்கிச் சூடு.

(5) கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் பண்ணைத் தொழிலாளர் சிக்கல்.

(6) சேலத்தில் பேருந்து விபத்து.

(7) கோயம்புத்தூரில் பேருந்து விபத்து.

1970 மார்ச் 20]

(ஈ) திருச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட கோர படகு விபத்து.

(உ) விசாரணை ஆணைக்குழுக்கள் யாவும் வேலை முடித்துத் தங்கள் அறிக்கைகளை அனுப்பியுள்ளனர்.

பின்வரும் நிகழ்ச்சிகளைப் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் பேரவை முன் வைக்கப்பட்டன :----

1. வேட்டைக்காரன் புதூர் நிகழ்ச்சி.
2. அரவங்காடு காவலர் துப்பாக்கிச் சூடு.
3. சென்னை மாநகரில் பேருந்து ஊழியர்கள் மாணவர்கள் மோதல்.
4. கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் பண்ணைத் தொழிலாளர் சிக்கல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த விசாரணைக்குழு, ஆணைக் குழுக்களின் அறிக்கைகளில் எத்தனை குழுவின் அறிக்கைகள் அரசாங்கத்திற்கு சாதகமாக இருந்தன, எத்தனை குழுக்களின் அறிக்கைகள் பாதகமாக இருந்தன? பாதகமாக இருந்தால், அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இங்கு வெளியிடப்பட்ட அறிக்கைகளைப் பார்த்தே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாதகம் எது, பாதகம் எது என்பதை உணர்ந்திருக்கக்கூடும்.

திரு. கே. விநயகம் : இந்த அறிக்கைகளையெல்லாம் மேஜை மீது வைத்தால் மாத்திரம் போதாது, அவைகளை சட்டசபையில் விவாதிக்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை நாங்கள் தெரிவித்தோமே அதற்கு ஏன் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களோ, அல்லது மற்றவர்களோ இசையவில்லை. குறிப்பாக மாணவர்கள்-பஸ்தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு இடையே நடந்த தகராறு குறித்து, இனிமேல் அந்த மாதிரி வரக்கூடாது என்கின்ற நோக்கதோடு அதை விவாதிக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டோம். அதற்கு ஏன் முதல் அமைச்சர் அவர்கள் இசையவில்லை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேள்வி நேரத்தில் கோரிக்கை பற்றி கேட்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுமானால் தனி நபர் தீர்மானம் கொண்டுவாருங்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, I want you to give a ruling. The Chief Minister was pleased to say that I am making a request. I have put a question. My question was a definite question as to why the Chief Minister refuses to oblige the request of the Members of the Opposition. 'Yes' or 'No' he can say

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான் சொன்ன பதிலில் கேள்வி நேரத்தில் கோரிக்கை எழுப்பக்கூடாது என்று சொல்லவில்லை. கேள்வி நேரத்தில் கோரிக்கை பற்றி கேட்கக்கூடாது என்றுதான் சொன்னேன். கோரிக்கை பற்றி அந்த அறிக்கை வைக்கப்பட்ட நேரத்தில் அதை விவாதிக்க வேண்டும் என்று சொல்லி, அதற்கான விளக்கங்கள் தரப்பட்ட காரணத்தினால், அதைப் பற்றி விவாதம் எழுப்பக்கூடாது என்றுதான் சொன்னேன்.